**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | |
|---|---|
| **Calender** | **:** |
| **Miscellaneous** | **: CC.No.1107/2024** |
| **Preliminary Register** | **:** |
| **Police Station** | **: Neelangarai PS** |
| **Deposition of witness for** | **: LW1 / PW1** |
| | **:** |
| **Name** | **: Deepak** |
| | **:S/o. Sivakumar** |
| | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025.**

**(**எதிரி ஆஜர் **,** எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1.** நான் நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் கடந்த 06.07.2024 இரவு 10.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த பொழுது ஏதோ எரிகிற வாசனை வந்ததால் என்னவென்று வெளியில் வந்து பார்த்த பொழுது நானும் எனது தந்தையும் வந்து பார்த்த பொழுது ஆஜர் எதிரி என்னுடைய சகோதரி ஸ்வேதா அவருடைய நைட்டியை எதிரியின் மனைவியிடம் தைப்பதற்காக கொடுத்திருந்தார்.

**2.** அதை ஆஜர் எதிரி எரித்துக் கொண்டிருந்தார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று நான் கேட்ட பொழுது ஆஜர் எதிரி நான் அப்படிதான் செய்வேன் என்று என்னை அசிங்கமாக திட்டி அவர் வீட்டிற்குள் சென்று மீன் வெட்டும் கத்தியை எடுத்து வந்து எனது தலையில் வெட்டினார்.

**(** தற்பொழுது சாட்சி தனது தலையில் ஏற்பட்ட காயத்தின் வடுவை நீதிமன்றத்தில் காண்பித்தார்**.** சாட்சி தலையில் நான்கு முதல் ஐந்து சென்டிமீட்டர் அளவிற்கு தலையின் வலது பக்க நெற்றிக்கு மேல் தலையின் நடுப்பகுதியில் வெட்டி இதற்கான தழும்பு காணப்பட்டது**)**

3. அதன் பின்பு எனது தந்தை அடிப்பட்ட எண்ணெய் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது பின்பு மறுநாள் நானும் எனது தந்தையும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னோடது தான் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் அந்த புகார் மனு அ சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என்னை விசாரணை செய்தனர் என்னிடம் காட்டப்படும் கத்தியானது எதிரி என்னை வெட்ட பயன்படுத்திய கத்தி ஆகும். அந்தக் கத்தி சா பொ ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு எழுத படிக்க தெரியும். நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். காவல் நிலையத்தில் எழுதிய புகார் நான் எழுதிய புகார் தான். புகார் மனுவை நான் எழுதியப் பின்பு தான் போலீசாரிடம் கொடுத்தேன். சம்பவம் சுமார் 10.30 மணி அளவில் நடந்தது. சம்பவம் நடந்த பொழுது நானும் எனது தந்தையும் எனது தாய் மற்றும் எனது சகோதரி மற்றும் எனது சகோதரியின் கை குழந்தை இருந்தனர். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கு சுமார் இரண்டு கிலோமீட்டர் இருக்கும். நானும் எதிரியும்

மீனவர் சமுதாயம் என்றால் சரிதான். மீன் வெட்டும் அனைவரிடம் இது போல் கத்தி இருக்கும் என்றால் சரிதான்.

2. நான் கடலுக்கு மீன் பிடிக்க செல்வேன். விடிய காலை 3 மணிக்குச் சென்று காலை 10 மணிக்கு திரும்பவும் எப்ப வேணும்னாலும் செல்வோம். எதிரிக்கும் எங்களுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக தகராறு கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்தது என்றால் சரியல்ல. எதிரி எனது உறவினர் என்றால் சரிதான். எனது மீனவ சமுதாய இடத்தில் எங்களுக்குள் சிறிய பிரச்சனை ஏற்பட்டதால் அங்கு பஞ்சாயத்து பேசி சரி செய்வார்கள் என்றால் சரிதான். எதிரி என்னை தாக்கியப் பின்பு இரவு 12 மணி அளவில் நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். சம்பவம் நடந்த பொழுது எனது தந்தை ஊர் பஞ்சாயத்து குழுவில் ஒரு உறுப்பினர் ஆவார்.

3. நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும் எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பல ஆண்டுகளாக பிரச்சனை உள்ளதால் அவர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக உண்மைக்கு புறமாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கபடி விளையாடுவேன் என்றால் சரிதான். அது போல் கபடி விளையாடும் போது தெரியாமல் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி தான் என்னை வெட்டினார் என்று பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சி கொடுக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் காவல்துறை கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கோபத்தில் நான் சொல்வது போல் வெட்டி இருந்தால் இந்த ஆயுதத்தில் வெட்டப்பட்டு இருந்தால் பெரிய காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் நான் எதிரி வெட்டிய

பொழுது அவரை அவரது கையை பிடித்துக் கொண்டதால் இந்த காயம் சிறிதாக ஏற்பட்டது.

**மறுவிசாரணை.** இல்லை

**Sd/– ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | **:** | |
| **Miscellaneous** | **:** | **CC.No.1107/2024** |
| **Preliminary Register** | **:** | |
| **Police Station** | **:** | **Neelangarai PS** |
| | | |
| **Deposition of witness for** | **:** | **LW2 /PW2** |
| | **:** | |
| **Name** | **:** | **Sivakumar** |
| | **:** | **S/o. Pulkan Durai** |
| | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025.**

**(**எதிரி ஆஜர் **,** எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

**1.** நான் நீலாங்கரையில் வசித்து வருகிறேன். நான் மீனவராக உள்ளேன். கடந்த 06.07.2024 இரவு 10.30 மணி அளவில் எனது வீட்டில் இருந்த பொழுது ஏதோ எரிகிற வாசனை வந்ததால் நானும் எனது மகளும் வெளியே வந்து பார்த்த பொழுது எனது மகள் எனது நைட்டியை எதிர் வீட்டில் இருக்கும் ஆஜர் எதிரி நந்தகுமார் எரித்துக்

கொண்டிருந்தார். நான் ஏன் குழந்தையின் நைட்டியை இருக்கிறாய் என்று கேட்டதற்கு என்னை எதிரி நந்தகுமார் அசிங்கமான தகாத வார்த்தையால் திட்டினார்.

**2.** அப்பொழுது எனது மகன் வயதில் மூத்தவரை ஏன் இப்படி திட்டுகிறாய் என்று கேட்டதற்கு எதிரி வீட்டிற்குள் ஓடிச் சென்று கையில் கத்தியை எடுத்து வந்து எனது மகன் தீபக்கின் தலையில் வெட்டினார். அப்பொழுது எனது மகள் ஸ்வேதா அந்த கத்தியை கையில் பிடித்ததால் எனது மகனுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. அதன் பின்பு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எதிரின் கையில் இருந்த கத்தியை பிடுங்கி காவல் நிலையத்திற்கு தெரிவித்தனர். அப்பொழுது காவலர்கள் அங்கு வந்தனர்.

**3.** பின்பு எனது மகனை நான் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். பின்பும் மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. நானும் எதிரியும் உறவினர்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள கத்தி போல் மீன் வெட்டும் அனைத்து தரப்பினர் வீட்டிலும் இருக்கும் என்றால் சரியல்ல. சிறிய கத்தி இருக்கும் இது போல் பெரிய கத்தி இருக்காது. எனது தந்தை இறந்ததிலிருந்து எதிரியுடன் பேச்சு வார்த்தை கிடையாது. எனது தந்தை காலத்தில் இருந்து சிறிய சிறிய பிரச்சனை வருவதால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை கிடையாது. எங்களது ஊரில் சிறு சிறு பிரச்சனை ஏற்பட்டால் பஞ்சாயத்தில் பிரச்சனையை தீர்த்து வைப்பது பழக்கம் என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் பத்து நபர்களில் நானும் ஒரு நிர்வாகி.

2. எதிரி எனது மகனை வெட்டிய பொழுது ரத்தக்கரை ஏற்பட்ட சட்டையை காவல்நிலையத்தில் ஒப்படைத்தனா என்றால் நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன். எதிரிக்கும் எங்களுக்கும் உள்ள குடும்ப பிரச்சினை சம்பந்தமாக எதிரி மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக எனது மகனை வைத்து பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் ஊரில் பஞ்சாயத்து தலைவராக உள்ளதால் காவல்நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்து எதிரி மீது வழக்கு தகவல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் கபடி விளையாடும் பொழுது எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

**Sd/– ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**